# கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர
# வரலாறு

## பாடத்திட்டம்

## தரம் 12 - 13

(இப்பாடத்திட்டமானது 2009 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்படும்)

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# 1.0 அறிமுகம்

2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் புதிய கல்விச் சீர்த்திருத்தத்துக்கு அமைவாக கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரத்திற்கான இப்பாடத்திட்டமானது 2009 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வருகின்றது. மேலும் வரலாறு பாடத்திட்டமானது தேசிய கொள்கைகளுக்கு அமைவாகவும் மாணவரிடத்தே தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கேற்றவாறும் தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிய பாடத்திட்டமானது 4 பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. அவையாவன,

1. வரலாறு : இலங்கை வரலாறு (வரலாற்றுக்கு முற்பட்ட காலந் தொடக்கம் கி.பி. 1978 வரை)
2. வரலாறு : இந்திய வரலாறு (வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் கி.பி. 1206 வரை)
3. வரலாறு : ஐரோப்பிய வரலாறு (கி.பி. 1500 தொடக்கம் கி.பி. 1989 வரை)
4. வரலாறு : நவீன உலக வரலாறு (கி.பி. 1500 தொடக்கம் கி.பி. 1989 வரை)

வரலாற்றைக் கற்கும் அனைத்து மாணவர்களும் இலங்கை வரலாறு பாடத்திட்டத்தைக் கட்டாயம் பயில வேண்டும். அத்துடன் இந்திய வரலாறு, ஐரோப்பிய வரலாறு, நவீன உலக வரலாறு ஆகியவற்றில் விருப்பத்தேர்வின் அடிப்படையில் கட்டாயம் ஏதாவதொரு பகுதியைத் தெரிந்தெடுத்துப் பயிலுதலும் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக விடய உள்ளடக்கத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

- **இலங்கை வரலாறு :-**
  - பழைய பாடத்திட்டத்தில் "நவீன ஏகாதிபத்திய வளர்ச்சி" எனும் தலைப்பின் கீழ் மிஷனரிக் கல்வி முறை மற்றும் ஆங்கிலேயரின் கல்விக் கொள்கை (கன்னங்கர சீர்த்திருத்தங்கள் வரை) மட்டுமே காணப்பட்டது. புதிய சீர்த்திருத்தத்தின்படி அத்தலைப்பு "இலவசக் கல்வியின் வளர்ச்சீ" எனும் உப தலைப்பின் கீழ் 1981 ஆம் ஆண்டு வரையிலான வளர்ச்சியையும் உள்ளடக்கியுள்ளது.
  - சோல்பரி யாப்பு மற்றும் சுதந்திரம் வரையிலான பழைய பாடத்திட்டம் "சுதந்திரத்தின் பின்னர் இலங்கை" எனும் புதிய தலைப்பின் கீழ் சுதந்திரத்தின் பின்னர் தேசிய அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள், 1972 வரை பாராளுமன்ற முறையின் வளர்ச்சி, 1978 நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை எனும் தலைப்புகளும் உள்ளடங்கும் விதத்தில் புதியபாடத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது.

- **இந்திய வரலாறு :-**

  இதில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

- **ஐரோப்பிய வரலாறு :-**
- ஐரோப்பிய நாகரிகத்தை மாற்றியமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய சக்திகள், அமெரிக்க சுதந்திரப் போராட்டம், இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உலகம் எனும் மூன்று புதிய தலைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
  - பழைய பாடத்திட்டத்தின்படி ஐரோப்பிய வரலாறு ஐரோப்பா நவீன காலத்துள் பிரவேசிப்பதுடன் ஆரம்பமானது, ஆனால் புதிய பாடத்திட்டத்தில் ஐரோப்பிய நாகரிகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிக் கலந்துரையாடப்படும். அதன்படி கிரேக்க, உரோம, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகங்கள் ஐரோப்பாவை கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்துள்ள விதம் ஆரம்பத் தலைப்பாகும்.
  - அமெரிக்க சுதந்திரப் போராட்டம் எனும் தலைப்பின் கீழ் அமெரிக்காவில் முதலில் குடியேறியவர்கள், குடியேற்றங்கள் அமைக்கப்பட்டமை, சுதந்திரப்போராட்டமும் அதன் விளைவுகளும் எனும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
  - இரண்டாம் உலக மகா யுத்தத்துடன் முடிவடைந்த பழைய பாடத்திட்டத்துக்குப் பதிலாக “இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலகம்” எனும் தலைப்பு புதிய பாடத்திட்டத்தின் இறுதித் தலைப்பாக அமைந்துள்ளது. இதன் கீழ் முதலாளித்துவ, சோஷலிச அணிகள் மற்றும் அணிசேரா அமைப்பு, பனிப்போர், கொள்கை மோதல்கள், ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் முதலிய காரணிகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

- இதற்கு மேலதிகமாக ஏற்கனவே இருந்த தலைப்புகளின் உள்ளடக்கங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பழைய பாடத்திட்டத்தில் காணப்பட்ட இத்தாலியை ஐக்கியப்படுத்தல், ஜேர்மனியை ஒற்றுமைப்படுத்தல் எனும் தலைப்புகளுக்குப் பதிலாக 1815 இன் பின்னர் லிபரல் வாத, தேசிய வாத சிந்தனைகளினதும் சக்திகளினதும் வளர்ச்சி என மாற்றப்பட்டு இச் சிந்தனைகளின் பிரயோகச் செயற்பாடுகளின் கீழ் இத்தாலி ஐக்கியப்படுதல், ஜேர்மனி ஐக்கியப்படுதல் எனும் விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

- **நவீன உலக வரலாறு :-**
  - இந்தியா மற்றும் ஐரோப்பா எனும் தெரிவுக்குரிய விடயப் பரப்பினுள் “நவீன உலக வரலாறு” எனும் புதிய பாடம் இங்கு அறிமுகம் செய்யப்படுகின்றது. இதன் கீழ் 1500 களின் பின்னர் ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய, அமெரிக்க வலயங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் கற்றலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.
  - இப்பாடத்திட்டம் 12ம், 13ம் தரங்களுக்குரியவை. அதற்கேற்ப கீழ்வரும் அடிப்படையில் பாட உள்ளடக்கத்தை அந்தந்தத் தரத்தில் செயற்படுத்துவதற்கு ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்.

## 2.0 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

- கால ஒழுங்கு, மூலாதார விமர்சிப்பு, காரண காரியத் தொடர்பு என்பவற்றினூடாகக் கட்டியெழுப்படும் பகுத்தாய்வு ரீதியான பயில்வையும் அறிவையும் நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தல்.

- சுதேச தனித்துவத்திற்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் வழி அமைக்கும் காரணிகளைப் பகுப்பாய்தல்.

- கடந்த காலத்தைக் கற்பதால் கிடைக்கும் விளக்கத்தைக் கொண்டு நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளல்.

- காலத்தையும் பிரதேசத்தையும் அடிப்படையாகக் கொண்ட நாகரிகங்களின் வளர்ச்சியைக் கற்று சமூகத்தில் நிலவும் பல்வகைமையினூடாக இழையோடும் பொதுவான பண்புகளை அறிந்து கொள்ளல்.

- தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியில் ஆராய முன்வரல்.

## தவணைகளுக்குரிய உத்தேச தேர்ச்சி மட்டங்கள்

| விடயம் | | இலங்கை வரலாறு | இந்திய வரலாறு | ஐரோப்பிய வரலாறு | உலக வரலாறு |
|---|---|---|---|---|---|
| தரம் 12 | 1 ஆம் தவணை | 1.1, 1.2, 2.1, 3.1, 3.2, 4.1, 4.2, 5.1 5.2, 5.3 | 1.1, 1.2, 2.1, 2.2, 3.1, 3.2 | 1.1, 1.2, 2.1, 2.2, 2.3, 3.1 | 1.1, 1.2, 1.3, 1.4, 1.5, 2.1 |
| | 2 ஆம் தவணை | 5.4, 5.5, 5.6, 5.7 5.8, 6.1 | 3.3, 4.1 | 3.2, 3.3, 4.1, 4.2, 5.1 | 2.1, 3.1, 3.2, 4.1, 4.2 |
| | 3 ஆம் தவணை | 6.3, 6.4, 7.1, 7.2, 7.3 | 4.2, 5.1, 5.2, 5.3 | 6.1, 6.2, 6.3, 7.1, 7.2, 8.1, 8.2 | 4.3, 4.4, 4.5 5.1, 5.2, 5.3, 5.4 |
| தரம் 13 | 1 ஆம் தவணை | 8.1, 8.2, 9.1, 9.2, 9.3, 10.1 | 6.1, 6.2, 7.1, 7.2 | 9.1, 9.2, 10.1, 10.2 | 7.1, 7.2, 8.1, 8.2, 9.1 |
| | 2 ஆம் தவணை | 10.2, 10.3, 11.1, 11.2, 12.1, 12.2, 13.1, 13.2 | 8.1, 8.2, 8.3, 9.1, 9.2 | 11.1, 11.2, 12.1, 12.2 | 9.2, 10.1, 10.2, 10.3, 11.1, 11.2 |
| | 3 ஆம் தவணை | 14.1, 14.2, 15.1, 16.1, 16.2, 17.1, 17.2 | 10.1, 10.2, 11.1, 11.2, 11.3, 11.4 | 13.1, 13.2, 14.1, 14.2, 15.1, 15.2 | 12.1, 12.2, 12.3, 13.1, 13.2, 13.3, 13.4 13.5 |

## 3.0 பாடத்திட்டம்

## 3.1 தரம் 12

**இலங்கை வரலாறு (வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடக்கம் 1978 வரை)**

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 1.0 கால ஒழுங்கு, மூலாதார விமர்சிப்பு, காரண காரியத் தொடர்பு என்பவற்றின் ஊடாகக் கட்டியெழுப் பப்படும் பகுத்தாய்வு ரீதியான பயில்வையும் அறிவையும் நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துவார். | 1.1 இலக்கிய மூலாதாரங்களினூடாக வரலாற்று விடயங்களைக் கட்டியெழுப்பத்தக்க விதத்தைப் பகுத்தாய்வார்.<br><br>1.2 தொல்பொருளியல் மூலாதாரங்களின் ஊடாக வரலாற்று விடயங்களைக் கண்டறியத்தக்க விதத்தைத் தேடியறிவார். | • இலங்கையின் வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்<br>  • மூலாதாரங்களை வகைப்படுத்தல்<br>    • இலக்கியங்கள்<br>      • உள்நாட்டு<br>      • வெளிநாட்டு<br>    • தொல்லியல்<br>      • இடிபாடுகள்<br>      • சிலாசாசனம்<br>      • நாணயம் | 10 |
| 2.0 உண்ணாட்டு மற்றும் வெளி அமைவிடத்திற் கேற்ப நாட்டின் வரலாறு தீர்மானிக்கப் படுகிறது என்பதற்கான காரணிகளை முன் வைப்பார். | 2.1 இலங்கையின் நாகரிகம் இசைவடைவதில் புவியியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்திய விதத்தைப் பகுத்தாய்வார். | • இலங்கையின் வரலாற்றை இசைவடைவதில் செல்வாக்குச் செலுத்திய புவியியற் காரணிகள்<br>  • இலங்கையின் புவியியல் அமைவிடம்<br>  • புவியியல் அமைவிடம் வரலாற்றின் மீது செலுத்திய தாக்கம் | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 3.0 இலங்கை நாகரிகத்தின் ஆரம்பம், வளர்ச்சி, பரம்பல் என்பவற்றை ஆராய்ந்து வரலாற்றின் வளர்ச்சி மற்றும் போக்குகள் பற்றிய விளக்கத்துடன் செயற்படுவார். | 3.1 இலங்கைக்கு நீண்ட கால தனித்துவமான வரலாற்றுப் பின்னணி உள்ளது என்பதை வரலாற்றுக்கு முந்திய காலத்தினூடாக எடுத்துக்காட்டுவார். | • இலங்கையின் புராதன காலம் | 06 |
| | 3.2 இலங்கையின் ஆரம்பக் குடியேற்றங்கள் பற்றி விபரிப்பதனூடாக காலத்திற்கும் அமைவிற்கும் ஏற்ப இலங்கையின் நாரிக வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வார். | • ஆரம்பக் குடியேற்றங்களுக்கு முன்னைய காலம்<br>• ஆரம்பக் குடியேற்றங்களும் பரம்பலடைதலும் - விஜயனிலிருந்து தேவானம்பியதிஸ்ஸன் வரை | |
| 4.0 ஒழுங்குபடுத்தப்பட்ட சமயத்தினூடாக ஒழுக்கமான சமூகம் கட்டியெழுப்பப்படும் முறை பற்றிய விடயங்களில் கவனஞ் செலுத்தி, நற்பண்புகளை பாதுகாக்க பங்களிப்பார். | 4.1 பௌத்தத்திற்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட வழிபாடுகளும் நம்பிக்கைகளும் பற்றித் தெரிந்து கொள்வார். | • இலங்கையில் பௌத்த சமயம் ஆரம்பமாதலும் பரம்பலடைதலும்<br>  • மகிந்த தேரரின் வருகைக்கு முன் காணப்பட்ட வழிபாடுகளும் நம்பிக்கைகளும் | 10 |
| | 4.2 இலங்கைச் சமூகம் பௌத்த சமயத்தினூடாக கட்டியெழுப்பப்பட்ட விதம் பற்றி தகவல்களை முன் வைப்பார். | • பௌத்த சமயம் ஆரம்பமாதலும் பரவுதலும்<br>  • இந்தியப் பின்னணி<br>  • இலங்கையில் பௌத்த சமயம் ஆரம்பமாதல்<br>  • பௌத்த சமயம் ஆரம்பமான பின்னர் இலங்கையில் ஏற்பட்ட சமூக பண்பாட்டு வேறுபாடுகள் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 5.0 இலங்கையின் பல்வேறு காலகட்டங்களிலும் ஏற்பட்ட அரசியல் தோற்றப்பாடுகளை அறிவதன் மூலம் பெற்ற அனுபவத்தால் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் வளப்படுத்திக் கொள்வதற்காக அவற்றைப் பிரயோசனமான முறையில் பயன்படுத்திக் கொள்வார். | 5.1 ஆட்சியாளர்களின் குணவியல்புகளின் அடிப்படையில் அரசின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் அனுராதபுர இராசதானி அரசியலின் ஊடாக விபரிப்பார். | • ராஜரட்டை நாகரிகத்தின் அரசியல் வளர்ச்சி.<br>  • அனுராதபுர ராஜதானி<br>    • பண்டுகாபய மன்னனிலிருந்து ஐந்தாம் மஹிந்த மன்னன் வரையிலான அரசியல் வளர்ச்சி | 45 |
| | 5.2 வெளிநாட்டு செல்வாக்குகளினூடாக நாட்டின் வரலாறு மாற்றமடையும் முறையினைப் பற்றிய தகவல்களை அனுராதபுர இராசதானி ஊடாக சேகரிப்பார். | • வெளிநாடுகளுடன் நிலவிய தொடர்புகளும் அவற்றின் செல்வாக்குகளும்<br>  • அரசின் வளர்ச்சி<br>  • நிர்வாக முறை | |
| | 5.3 அனுராதபுர ராச்சியத்தின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் பங்களித்த காரணிகளை தர்க்கரீதியாக ஆராய்வார். | • அனுராதபுர ராசதானியின் சீர்குலைவும் வீழ்ச்சியும் | |
| | 5.4 வெளிநாட்டு செல்வாக்குகளின் காரணமாக நாட்டின் வரலாறு மாற்றமடையும் விதம் தொடர்பான தகவல்களை பொலனறுவை ராசதானியூடாகச் சேகரிப்பார். | • பொலன்னறுவை ராஜதானி<br>  • சோழர் ஆட்சி | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 5.5 ஆட்சியாளரின் குணவியல்புகளின் அடிப்படையில் அரசின் எழுச்சி, வீழ்ச்சி அடையும் விதங்களை பொலனறுவை இராசதானியினூடாக விபரிப்பார். | • முதலாம் விஜயபாகு மன்னனிலிருந்து காலிங்க மாகன் வரையிலான அரசியல் வளர்ச்சி | |
| | 5.6 புராதன காலத்தில் தோன்றிய பெண்களின் உயரிய தலைமைத்துவத்தை மதிப்பார். | • பெண்களின் தலைமைத்துவம் | |
| | 5.7 வெளிநாட்டு செல்வாக்குகள் மூலம் நாட்டின் வரலாறு மாற்றமடையும் விதம் தொடர்பான தகவல்களை பொலனறுவை இராசதானி ஊடாகச் சேகரிப்பார். | • வெளிநாடுகளுடன் கொண்டிருந்த உறவுகளும் அவற்றின் வளர்ச்சியும்<br>• அரசின் வளர்ச்சி<br>• நிர்வாக முறை | |
| | 5.8 பலம்மிக்க இராசதானியாக விளங்கிய பொலனறுவையின் எழுச்சி, வீழ்ச்சிக்கான காரணங்களை தர்க்க ரீதியாக கட்டியெழுப்புவார். | • பொலன்னறுவை ராஜதானியின் சீர்குலைவும் வீழ்ச்சியும் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 6.0 ரஜரட்டை நாகரிகத்தின் பொருளாதாரம் மற்றும் சமூகம் பற்றி நுணுகி ஆராய்ந்து தேசிய அருஞ்செல்வங்களையும் தனித்துவத்தையும் பாதுகாக்க செயற்படுவார். | 6.1 ரஜரட்டை நாகரிகத்தின் உயிர்நாடியாக விவசாயம் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தை ஆராய்ந்து அதன் முன்மாதிரிகளை நிகழ்காலத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பார். | • ரஜரட்டை நாகரிகத்தின் பொருளாதார முறைமையும் சமூகமும்<br>  • விவசாயம் | 40 |
| | 6.2 வறள் வலயத்திற்கு நீர்ப்பாசனம் பற்றி ஆராய்ந்து புராதன அருஞ்செல்வங்களைப் பாதுகாக்க முன்வருவார். | • நீர்ப்பாசனம் | |
| | 6.3 ரஜரட்டை நாகரிகத்தின் வியாபாரம், கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பம் என்பன அந்நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களித்த விதத்தை ஆராய்ந்து அவ்வருஞ் செல்வங்களை தொடர்ந்தும் பாதுகாக்கும் வகையில் செயற்படுவார். | • வியாபாரமும் கைத்தொழிலும் தொழினுட்பமும் | |
| | 6.4 ரஜரட்டை நாகரிகத்தின் பண்பாட்டு மேம்பாடு பற்றி தேடியறிந்து அதன் தனித்துவத்தை பாதுகாக்கும் வகையில் செயற்படுவார். | • பண்பாட்டு வளர்ச்சி | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 7.0 இலங்கையில் பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்த சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சி பற்றி ஆராய்ந்து அவற்றில் உள்ள முன் மாதிரிகளை தற்காலம் மற்றும் எதிர் காலத்தை வெற்றியடையச் செய்யப் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துவார். | 7.1 பொலனறுவை இராசதானி வீழ்ச்சியடைந்த பின்னர் தோன்றிய இராசதானிகள் பற்றிய தகவல்களை சேகரிப்பார். | • ரஜரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைந்த காலம் தொட்டு 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையிலான இலங்கை<br>• இராசதானிகள் இட மாற்றமடைதல், தம்பதெனிய, யாப்பகூவ, குருணாகல், கம்பளை, கோட்டை<br>• யாழ்ப்பாண இராசதானி | 30 |
| | 7.2 பொலனறுவை வீழ்ச்சியடைந்த பின்னர் தோன்றிய இராசதானிகள் வெளிநாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகள் மற்றும் அவற்றின் செல்வாக்குகள் பற்றி விபரிப்பார். | • வெளிநாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளும் அவற்றின் செல்வாக்குகளும் | |
| | 7.3 பொலனறுவை வீழ்ச்சியடைந்த பின்னர் தோன்றிய இராசதானிகளது சமூக, பொருளாதார, பண்பாட்டு தகவல்களை நுணுகி நோக்கி அதன் தனித்துவத்தை பாதுகாக்க பங்களிப்பார். | • பொருளாதாரம்<br>• சமூகம், பண்பாடு | |

## 3.2 தரம் 12

### இந்திய வரலாறு (புராதன காலந்தொடக்கம் 1206 வரை)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 1.0 கால ஒழுங்கு, மூலாதார விமர்சிப்பு, காரண காரியத் தொடர்பு என்பவற்றின் ஊடாக கட்டியெழுப்பப்படும் பகுத்தாய்வு ரீதியான பயில்வையும் அறிவையும் நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துவார். | 1.1 இலக்கிய மூலாதாரங்களின் துணையுடன் இந்திய வரலாறு கட்டியெழுப்பப்பட்ட விதம் பற்றி ஆராய்ந்தறிவார். | • முக்கிய வரலாற்று மூலாதாரங்கள்<br>• இலக்கிய மூலாதாரங்கள் | 08 |
| | 1.2 இந்திய வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் தொல்லியல் மூலாதாரங்கள் பங்களிப்புச் செய்துள்ள விதம் பற்றி ஆராய்வார். | • தொல்பொருளியல் மூலாதாரங்கள் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 2.0 காலம், இடம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நாகரிகத்தின் வளர்ச்சியை கற்கையில் சமூகத்தில் காணப்படும் வேறுபாடுகளினூடாக இழையோடும் பொதுப் பண்புகளைப் பற்றி அறிந்து கொள்வார். | 2.1 இந்தியாவின் புவியியல் அமைவு அதன் வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய விதத்தை ஆராய்ந்து விளக்கம் பெறுவார். | • புவியியல் காரணிகள் இந்திய வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய விதம்<br>• இந்தியாவின் புவியியல் அமைவு (உள்வாரி/ வெளிவாரி)<br>• மத்திய ஆசியாவிலிருந்து வேறாக அமைந்திருத்தல்<br>• வடமேல் கணவாய், கடினப் பாதை<br>• தரைத்தோற்றம்<br>• நதிப் பள்ளத்தாக்குகள், துறைமுகங்கள்<br>• மலைத்தொடர்கள்<br>• பீடபூமிகளும் சமவெளிகளும்<br>• பாலைவனங்கள்<br>• தென் இந்தியாவின் அமைவு | 14 |
| | 2.2 இந்தியாவின் விசாலத் தன்மையும் பல்வகைமையும் இந்திய வரலாற்றில் செல்வாக்குச் செலுத்தியுள்ள விதத்தை ஆராய்ந்தறிவார். | • இந்தியாவின் விசாலத்தன்மையும் பல்வகைமையும் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 3.0 சிந்துவெளி நாகரிகம் மற்றும் வைதிகப் பண்புகளின் ஊடாக இந்திய நாகரிகத்தின் தோற்றம் பற்றி பரிசீலிப்பார். | 3.1 தொல்பொருளியல் சான்றிகளின் மூலம் சிந்துவெளி நாகரிகத்தின் தோற்றம், தன்மை, அதன் வீழ்ச்சி ஆகியன பற்றிய வரலாற்றைக் கட்டியெழுப்புவார். | • இந்திய நாகரிகத்தின் தோற்றம்<br>  • சிந்துவெளி நாகரிகம்<br>    • ஆரம்பம் (உள்நாட்டு, வெளிநாட்டு)<br>    • விரிவடைதல்<br>    • சிந்துவெளி நாகரிகத்தின் நகர இயல்பு | 20 |
| | 3.2 சிந்துவெளி நாகரிகமானது பிந்திய நாகரிக வளர்ச்சிக்குப் பங்களித்த விதத்தை ஆராய்வார். | • மேற்படி நாகரிகத்தின் பங்களிப்புகள்<br>  • நகராக்கம்<br>  • பொருளாதாரம்<br>  • பண்பாடு | |
| | 3.3 இலக்கிய மூலாதாரங்களினூடாக வைதீக நாகரிகம் தொடர்பான வரலாற்றை ஆராய்வார். | • வைதீகப் பண்புகள்<br>  • இருக்கு வைதீக யுகம்<br>    • ஆரம்பக் குடியேற்றங்களும் பரவலும்<br>    • சமூகம், பொருளாதாரம், கலாசாரம்<br>  • வைதீக யுகத்துக்கும் பிற்பட்ட காலம்<br>    • சமூகப் பொருளாதார நிலை<br>    • கலாசாரம் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 4.0 நாகரிகத்தின் வளர்ச்சி படிப்படியாக ஓர் கால ஒழுங்கில் இடம் பெறுகிறது என்பதை இந்தியாவின் வரலாற்று நிகழ்வுகளின் மூலம் கட்டியெழுப்புவார். | 4.1 கோத்திர யுகத்திலிருந்து பேரரசு யுகம் வரைக்கும் இந்திய நாகரிகம் விருத்தியடைந்த விதத்தைப் பரிசீலிப்பார். | • பேரரசும் வரை இந்தியா<br>  • அரசியல் நிலைமை<br>    • வைதீக யுகத்தின் பின்னரான அரசியல் நிலைமைகள்<br>    • கி.மு. ஏழாம் ஆறாம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் அரசியல் நிலைமை<br>      • பதினாறு மாபெரும் குடியேற்றங்கள்<br>      • மகத பேரரசின் தோற்றமும் பரம்பலும் | 30 |
| | 4.2 சமய மற்றும் தத்துவக் கருத்துக்கள் இந்திய நாகரிகத்தை கட்டியெழுப்ப பங்களித்த முறை பற்றி நுணுகி ஆராய்வார். | • இந்திய சமய மற்றும் தத்துவச் சிந்தனைகளின் வளர்ச்சி<br>  • பிராமணியம், சமண சமயம், பௌத்த சமயம், வேறு சமயங்கள் | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 5.0 மௌரிய பேரரசின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி ஆகியவற்றினூடாக அரசொன்றை பலம் வாய்ந்த வகையில் கொண்டு செல்வதற்காக பின்பற்ற வேண்டிய காரணிகள் பற்றி கவனஞ் செலுத்துவார். | 5.1 பலம்வாய்ந்த மௌரிய பேரரசினை கட்டியெழுப்பப்பட்ட விதம் பற்றி பகுப் பாய்வு செய்வார்.<br>5.2 பேரரசு ஒன்றில் காணப்பட்ட சிறப்பான பண்புகளை மௌரிய பேரரசினூடாகப் பரீட்சிப்பார்.<br>5.3 பலம்வாய்ந்த பேரரசு ஒன்றின் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை மௌரியப் பேரரசினூடாகப் பகுப்பாய்வு செய்வார். | • மௌரியப் பேரரசு<br>  • மௌரிய அதிகார விரிவாக்கம்<br>• நிர்வாக முறை<br>  • அசோக நீதி<br>  • கலாசார அபிவிருத்தி<br>• மௌரிய பேரரசின் வீழ்ச்சி | 25 |

## 3.3 தரம் 12

## ஐரோப்பிய வரலாறு (கி.பி. 1500 முதல் 1989 வரை)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 1.0 பல்வேறு சக்திகளின் ஆதிக்கத்தினால் நாகரிகத்தை கட்டி யெழுப்பப்படும் விதத்தை ஐரோப்பிய நாகரிகத்தினூடாக பகுப்பாய்வு செய்வார். | 1.1 கிரேக்க, உரோம, கிறிஸ்தவ நாகரிகங்கள் ஐரோப்பிய நாகரிகத்துக்கு அடிப்படையாக அமைந்த விதம் பற்றி பகுத்தாய்வார். | • ஐரோப்பிய நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் செல்வாக்குச் செலுத்திய சக்திகள்<br>• கிரேக்க, உரோம மற்றும் கிறிஸ்தவ நாகரிகம்<br>• கிரேக்க நாகரிகம்<br>• உரோம நாகரிகம்<br>• கிறிஸ்தவ நாகரிகம் | 15 |
| | 1.2 வலிமைமிக்க ஐரோப்பிய நாகரிகத்தின் மீது இஸ்லாமிய நாகரிகத்தின் தாக்கம் பற்றிப் பரிசீலிப்பார். | • இஸ்லாமிய நாகரிகம் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 2.0 ஐரோப்பாவில் நிகழ்ந்த மாற்றங்கள் உலகில் செல்வாக்குச் செலுத்திய விதத்தினைப் பகுப்பாய்வு செய்வார். | 2.1 மானிய முறையின் முக்கிய பண்புகளை ஆராய்ந்து ஐரோப்பிய நாகரிகத்தின் வளர்ச்சியின் முக்கிய கட்டமாக அதன் முக்கியத்துவத்தைப் பகுப்பாய்வு செய்வார். | • ஐரோப்பா நவீன யுகத்தில் பிரவேசித்தல்<br>• மானிய முறையும் அதன் வீழ்ச்சியும் | 18 |
| | 2.2 ஐரோப்பிய நாகரிகம் நவீன யுகத்திற்கு பிரவேசித்த விதத்தை மறுமலர்ச்சி, புதிய கண்டுபிடிப்புக்கள், தேசிய அரசுகளின் எழுச்சி என்பவற்றின் மூலம் பகுப்பாய்வு செய்வார். | • நவீன யுகத்தில் பிரவேசித்தல்<br>• மறுமலர்ச்சி<br>• தேசிய அரசுகளின் எழுச்சி<br>• விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் | |
| | 2.3 நாடுகாண் பயணங்கள், ஐரோப்பாவின் அதிகாரப் பரவல் என்பவற்றின் ஊடாகப் பேரரசுகள் கட்டியெழுப்பப்பட்ட விதத்தைப் பரீட்சிப்பார். | • நாடுகாண் பயணங்களும் ஐரோப்பிய ஆதிக்க வளர்ச்சியும் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 3.0 வளர்ச்சியடைந்து வந்த மனித நாகரிகம் பல்வேறு தாக்கங்களினால் பரந்த மாற்றங்களுக்கு உள்ளானது பற்றி விளங்கி நிகழ் காலத்தை எதிர் கொள்ளும் திறனைப் பெறுவார். | 3.1 கிறிஸ்தவ நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகியிருந்த ஐரோப்பிய நாகரிகத்தில், சமயச் சீர்த்திருத்தங்கள் ஏற்பட்டமைக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்வார். | • சமயச் சீர்திருத்தங்களும் புரட்டஸ்தாந்துக்கு எதிரான சீர்திருத்தங்களும் | 20 |
| | 3.2 புரட்டஸ்தாந்து, புரட்டஸ்தாந்து எதிர் நடவடிக்கைகளால் ஐரோப்பிய வரலாற்றில் நிகழ்ந்த மாற்றங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார். | • சமயச் சீர்திருத்தங்களுக்குப் பின்னணியாக அமைந்தவை<br>• புரட்டஸ்தாந்து இயக்கம்<br>• புரட்டஸ்தாந்து எதிர் சீர்திருத்த இயக்கம் | |
| | 3.3 ஜேர்மனியைப் போர்க்களமாக மையப்படுத்தி நடைபெற்ற தொடர் யுத்தங்கள் பற்றி ஆய்ந்தறிவார். | • முப்பதாண்டு யுத்தம் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 4.0 மனித உரிமைகளைப் பெறும் பொருட்டு நீண்ட காலமாக முயற்சி மேற்கொள்ளப்பட்ட விதத்தைப் பகுத்தாய்வார். | 4.1 அரசனின் அதிகாரத்தை மீறி, பாராளுமன்றத்தின் அதிகாரத்தை விரிவாக்கும் பொருட்டு, இங்கிலாந்து மக்கள் முன்னெடுத்துச் சென்ற போராட்டம் மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்த விதம் பற்றிப் பகுத்தாய்வார். | • பிரித்தானியப் பாராளுமன்ற முறை<br>• பாராளுமன்ற முறையின் ஆரம்பமும் வளர்ச்சியும் விளைவுகளும் | 13 |
| | 4.2 பாராளுமன்ற முறையின் பிரதான இயல்புகளைப் பிரித்தானிய முறைமையினூடாகத் பகுத்தாய்வார். | • பாராளுமன்றத்தின் இயல்புகள்<br>• பிரதிநிதித்துவ முறை<br>• கட்சி முறை<br>• அமைச்சரவை முறை | |
| 5.0 கைத்தொழில் புரட்சி, மனித நடவடிக்கைகள் மாற்றமடைவதில் பங்களித்த விதம் பற்றிப் பகுப்பாய்வு செய்வார். | 5.1 கைகளால் செய்த வேலைகளை இயந்திரங்களிடம் ஒப்படைத்த தொழிற் புரட்சியானது உலகப் போக்கையே மாற்றியமைத்த விதம் பற்றிய தகவல்களைத் திரட்டுவார். | • கைத்தொழில் புரட்சி<br>• ஆரம்பம்<br>• விரிவடைதல்<br>• விளைவுகள் | 13 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 6.0 கூட்டாகச் செயற்படுவதன் மூலம் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதை அமெரிக்க சுதந்திர போராட்டத்தின் மூலம் பகுப்பாய்வு செய்வார். | 6.1 அமெரிக்காவில் வாழ்ந்த ஆரம்பக் குடிமக்கள் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br><br>6.2 தற்கால உலகம் ஐரோப்பிய நாகரிகத்திற்கு இசைவாக்கம் பெற்ற விதத்தைக் குடியேற்றங்களின் தோற்றத்தினூடாகப் பரீட்சிப்பார்.<br><br>6.3 பேரரசிலிருந்து விடுதலை பெறும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட போராட்டம், நிறைவேற்றிக் கொண்ட அரசியல் யாப்பு என்பவற்றினால் அமெரிக்க சுதந்திரப் போர் உலக வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் விதத்தைப் பகுத்தாய்வார். | • அமெரிக்க சுதந்திரப்போராட்டம்<br>  • ஆரம்பக் குடிகள்<br>    • ஐரோப்பியர் அமெரிக்காவுக்கு வரும்போது அங்கு வாழ்ந்தவர்கள் (செவ்விந்தியர், அஸ்டெக், இன்கா, மாயா)<br><br>• குடியேற்றங்கள் தோன்றுதல்<br>  • ஐரோப்பியர் அமெரிக்காவிற்கு வந்தமைக்கான காரணங்கள்<br>  • ஐரோப்பியர் (ஸ்பானியர், பிரான்சியர், ஆங்கிலேயர்) அமெரிக்காவில் குடியேற்றங்களை நிறுவுதல்<br>  • இங்கிலாந்தின் அதிகாரத்தின் கீழ் குடியேற்றங்கள் நிருவகிக்கப்பட்ட விதம்<br><br>• சுதந்திரப் போர்<br>  • குடியேற்ற வாசிகளின் வெற்றிக்கான காரணங்கள்<br>  • சுதந்திரம் பெறல், புதிய அரசியல் யாப்பினை நிறைவேற்றிக் கொண்டமை. | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 7.0 கடுமையான போராட்டத்தின் மூலம் வென்றெடுத்த மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் செயற்படுவார். | 7.1 பல்வேறு ஏற்றத்தாழ்வுகளால் புரட்சிகள் உருவாகுகின்றமையை பிரான்சியப் புரட்சியின் அடிப்படையில் பகுத்தாய்வார். | • பிரான்சியப் புரட்சி<br>• பிரான்சியப் புரட்சியின் முக்கியத்துவம்<br>• பிரான்சின் பழைய முடியாட்சி முறை<br>• பிரான்சியப் புரட்சிக்கு வழிகோலிய காரணிகள்<br>• புரட்சியின் ஆரம்பமும் வளர்ச்சியும்<br>• புரட்சியின் முக்கிய சந்தர்ப்பங்கள் | 15 |
| | 7.2 பிரான்சிய மக்கள் முன்னெடுத்துச் சென்ற புரட்சியின் விளைவுகளின் காரணமாக பெறப்பட்ட மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பங்களிப்புச் செய்வார். | • புரட்சியின் விளைவுகள் | |
| 8.0 வரலாற்றில் முக்கியமான தனியாட்களது நடவடிக்கைகள் வரலாற்றை கட்டியெழுப்ப பங்களித்த விதத்தை பகுப்பாய்வு செய்வார். | 8.1 நெப்போலியனின் சீர்திருத்தங்கள், பிரான்சிய தேசியத்தை கட்டியெழுப்ப பங்களித்த முறையை விளக்குவார். | • நெப்போலியன் போனபாட் மற்றும் அவனது பேரரசு<br>• நெப்போலியன் பலம் பெறுவதற்கான காரணிகள்<br>• நெப்போலியனது சீர்திருத்தங்கள்<br>• நெப்போலியனது வெளிநாட்டுக் கொள்கைகள் | 15 |
| | 8.2 தலைசிறந்த பேரரசனாகிய நெப்போலியனது தோல்விக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்வார். | • நெப்போலியன் தோல்வி அடைந்தமைக்கான காரணங்கள் | |

## 3.4 தரம் 12

### நவீன உலக வரலாறு (கி.பி. 1500 இலிருந்து 1989 வரை)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 1.0 நவீன உலகின் தோற்றத்திற்குப் பின்னணியாக இருந்த ஐரோப்பிய சக்திகளைப் பகுத்தாய்வார். | 1.1 வணிக முதலாளித்துவத்தின் எழுச்சி நவீன உலகின் தோற்றத்திற்கு வழி வகுத்த விதத்தைப் பகுத்தாய்வார். | • நவீன உலகின் தோற்றம்<br>• மானிய முறையின் வீழ்ச்சியும் வணிக முதலாளித்துவத்தின் எழுச்சியும் | 30 |
| | 1.2 மறுமலர்ச்சியின் ஊடாக புதிய உலகம் தோற்றம் பெற்ற விதத்தைப் பகுத்தாய்வார். | • மறுமலர்ச்சி | |
| | 1.3 மறுமலர்ச்சியின் அரசியல் எழுச்சியை தேசிய அரசுகளின் எழுச்சியினூடாகப் பரிசீலிப்பார். | • தேசிய அரசுகளின் எழுச்சி | |
| | 1.4 உலகில் தனிமைப்பட்டிருந்த நாடுகள் நவீன உலகத்துடன் தொடர்பு பட்ட விதத்தை நாடுகாண் பயணங்கள் ஊடாகப் பகுத்தாய்வார். | • ஐரோப்பியரின் நாடுகாண் பயண இயக்கமும், அதன் விரிவாக்கமும் | |
| | 1.5 சமயச்சீர்திருத்தங்கள் நவீன உலகின் தோற்றத்துக்குப் பங்களிப்பு நல்கிய விதத்தை ஆய்ந்தறிவார். | • சமயச் சீர்திருத்தங்கள் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 2.0 உலகின் ஏனைய நாடுகளில் அரசியல், சமூக, பொருளாதார முறையில் மாற்றம் ஏற்படுவதற்கு ஐரோப்பா எவ்வாறு பங்களிப்புச் செய்துள்ளது என்பதனை பகுத்தாய்வார். | 2.1 ஐரோப்பாவில் பலம் வாய்ந்த அரசுகள், உலகம் முழுவதும் தமது அதிகாரத்தைப் பரப்பிய விதத்தைப் பகுத்தாய்வார். | • ஐரோப்பிய ஆதிக்க விரிவாக்கம்<br>• ஸ்பானியப் பேரரசின் விரிவாக்கம்<br>• போர்த்துக்கேயப் பேரரசின் எழுச்சியும் விரிவாக்கமும்<br>• ஒல்லாந்தின் (நெதர்லாந்து) ஆதிக்கப் விரிவாக்கம்<br>• பிரான்சின் ஆதிக்கப் விரிவாக்கம்<br>• பிரித்தானியரின் ஆதிக்கப் விரிவாக்கம் | 20 |
| 3.0 ஆசியாவின் வரலாறு மாற்றமடைவதற்கு பங்களிப்புச் செய்த காலனித்துவ செல்வாக்குகள் பற்றி விபரிப்பார். | 3.1 தென்னாசிய, தென் கிழக்காசிய நாடுகள் காலனித்துவத்துக்குள்ளாகிய விதத்தை விபரிப்பார். | • ஆசியாவில் காலனித்துவம்<br>• இந்தியா, சீனா, யப்பான்<br>• தென்கிழக்காசியா | 20 |
| | 3.2 கிழக்காசியா முழுவதும் காலனித்துவத்திற்கு உட்படாது விடினும் காலனித்துவ வாதிகளது செல்வாக்குகளுக்கு உட்பட்ட முறையினைப் பகுத்தாய்வார். | • இந்தோனேசியா, மலாயா, பர்மா (மியன்மார்), சீயம் (தாய்லாந்து), வியட்நாம், கம்போச்சியா, பிலிப்பைன்ஸ் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 4.0 நவீன உலகினை உருவாக்குவதற்குத் தூண்டுதலாக அமைந்த புரட்சிகள் பற்றி பகுத்தாய்வார். | 4.1 பாராளுமன்றத்தின் அதிகாரத்தை வளர்த்துக் கொள்வதற்கு இங்கிலாந்து மக்கள் மேற்கொண்ட போராட்டம் மானிட வர்க்கத்தின் வளர்ச்சிக்கு உதவிய விதம் பற்றி ஆங்கிலப் புரட்சியின் ஊடாகப் பரிசீலிப்பார். | • நவீன உலகை மாற்றியமைக்க உதவிய புரட்சிகள்<br>• கி.பி. 1688 ஆங்கிலப் புரட்சி | 40 |
| | 4.2 பேரரசுவாதத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதலாவது சுதந்திரப்போராட்டம் என்ற வகையில் அமெரிக்கப் புரட்சியின் முக்கியத்துவத்தை விபரிப்பார். | • அமெரிக்கப் புரட்சி | |
| | 4.3 உரிமைகளை வென்றெடுக்கும் பொருட்டுப் பிரான்சியர் மேற்கொண்ட புரட்சியானது அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உதவிய விதத்தைப் பகுத்தாய்வார். | • பிரான்சியப் புரட்சி | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 4.4 உலக நாகரிகத்தைப் போஷிப்பதில் ரஷ்யப் புரட்சியின் தாக்கத்தைப் பகுத்தாய்வார்.<br>4.5 பொதுவுடமை வாதத்தின் தோற்றம் பற்றி சீனப் புரட்சியின் ஊடாகப் பரீட்சிப்பார். | • ரஷ்யப் புரட்சி<br>• சீனப் புரட்சி | 14 |
| 5.0 கைத்தொழில் புரட்சி யானது மனித நட வடிக்கைகளை மாற்றத்துக்குள்ளாகிய விதம் பற்றி பகுப்பாய் வார். | 5.1 கைகளால் செய்த வேலைகளை இயந்திரங் களிடம் ஒப்படைப்பதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தேடியறி வார்.<br>5.2 கைத்தொழில் புரட்சி ஊடான தொழினுட்ப வளர்ச்சி பற்றி பரிசீலிப் பார்.<br>5.3 கைத்தொழில் புரட்சி விரிவடைந்த விதம் பற்றிய விடயங்களைத் திரட்டுவார்.<br>5.4 மனித நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக விருத்தியடைந்த கைத் தொழில்மயமாக்கத்தின் விளைவுகளைப் பகுத் தாய்வார். | • கைத்தொழில் புரட்சியும் அதன் தாக்கங்களும்<br>  • கைத்தொழில் புரட்சிக்குப் பின்னணியாக அமைந்த காரணிகள்<br>  • தொழினுட்பத்தின் வளர்ச்சி<br>  • விரிவாக்கம்<br>  • விளைவுகள் | |

# தரம் 13

## 3.1 தரம் 13

## இலங்கையின் வரலாறு (ஆரம்ப காலத்திலிருந்து 1978 ஆம் ஆண்டு வரை)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 8.0 இலங்கையின் வெவ்வேறு காலகட்டங்களில் இடம் பெற்ற அரசியல் தோற்றப்பாடுகளை பதினாறாம் நூற்றாண்டினூடாகத் நுணுகி நோக்கி, அதன் மூலம் பெற்ற படிப்பினைகளை நிகழ்கால, எதிர்காலங்களை வெற்றிகரமான தாக்கிக் கொள்வதற்காகப் பயன்படுத்துவார். | 8.1 பதினாறாம் நூற்றாண்டின் இலங்கை அரசியல் வரலாறு தொடர்பான தகவல்களைத் திரட்டுவார். | • பதினாறாம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியல் வரலாறு<br>• இராசதானிகள்<br>  • கோட்டை இராசதானி<br>  • யாழ்ப்பாண இராசதானி<br>  • கண்டி இராசதானி<br>  • சீதாவாக்கை இராசதானி | 25 |
| | 8.2 ஆட்சியில் நிலவும் குறைபாடுகள், அந்நிய ஆதிக்கத்திற்கு வழிவகுக்குமாற்றைப் போர்த்துக்கேயரின் இலங்கை வருகைக் கூடாகப் பகுத்தாய்வார். | • போர்த்துக்கேயரின் வருகை<br>  • போர்த்துக்கேயரின் வருகையும் அவர்கள் சுதேச இராசதானிகளுடன் கொண்ட தொடர்புகளும்<br>  • கரையோரப் பிரதேசங்கள் போர்த்துக்கேயரின் ஆட்சிக் குட்படுதல். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.0 இலங்கையின் பல்வேறு கால கட்டங்களில் நிகழ்ந்த அரசியல் சமூக, பொருளாதார தோற்றப்பாடுகளை ஆராய்ந்து அதன் மூலம் பெற்ற அனுபவங்களை நிகழ்காலத்தையும் எதிர் காலத்தையும் வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்குப் பயன்படுத்துவார். | 9.1 கண்டி இராசதானியை வளமூட்டுவதில் ஆட்சியாளரின் பங்களிப்பு தொடர்பான தகவல்களைக் கோவைப் படுத்துவார். | • கண்டி இராச்சியம்<br>• முதலாம் விமலதர்ம சூரிய மன்னனின் ஆட்சிக் காலத்திலிருந்து ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னனின் ஆட்சிக்காலம் முடியும் வரையான அரசியல் வரலாறு. | 30 |
| | 9.2 கண்டி இராசதானி போர்த்துக்கேயருடனும் ஒல்லாந்தருடனும் கொண்டிருந்த தொடர்புகளை ஒப்பீட்டு ரீதியில் பகுப்பாய்வு செய்வார். | • போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்<br>  • கண்டி இராச்சியம் போர்த்துக்கேயருடன் கொண்டிருந்த தொடர்புகள்<br>  • ஒல்லாந்தரின் வருகையும் கண்டி இராச்சியம் அவர்களுடன் கொண்டிருந்த தொடர்புகளும் | |
| | 9.3 கண்டி இராசதானி நிர்வாக, சமூக, பொருளாதார, கலாசார நிலைமைகளை நுணுகியாய்ந்து தமது அருஞ்செயல்வங்களைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பார். | • ஆட்சி, சமூகம், பொருளாதாரம், பண்பாடு<br>  • நிர்வாக முறை<br>  • சமூகம், பொருளாதாரம், பண்பாடு | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 10.0 இலங்கையில் மேலைத் தேயத்தவர்களின் அதிகார விரிவாக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களை நுணுகி ஆராய்ந்து தமது நாட்டின் தனித்துவத்தைக் காத்து பலம் வாய்ந்த தேசியமாக உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்வார். | 10.1 இலங்கையில் போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சி பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.<br>10.2 போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கரையோரப் பிரதேசங்களில் கையாண்ட பொருளாதார, சமயக் கொள்கைகள் தொடர்பாகக் கற்றறிவார்.<br>10.3 போர்த்துக்கேயரினதும் ஒல்லாந்தரினதும் சமூக, பண்பாட்டு செல்வாக்குகளைப் பகுத்தாய்வார். | • கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சி<br>• ஆட்சி முறை<br>• பொருளாதார, சமயக் கொள்கைகள்<br>• சமூக, பண்பாட்டுச் செல்வாக்கு | 15 |
| 11.0 இலங்கையில் ஆங்கிலேயரின் அதிகார விரிவாக்கத்தை நுணுகி ஆராய்ந்து தமது நாட்டின் இறைமையை பாதுகாப்பதற்குரிய தேவையினை விளங்கிச் செயற்படுவார். | 11.1 பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களின் அதிகாரத்தை தமதாக்கிக் கொண்ட விதத்தைப் பகுப்பாய்வார்.<br>11.2 பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்ட விதத்தைப் பரிசீலனை செய்வார். | • பிரித்தானியரின் இலங்கை வருகை<br>  • கரையோரப் பிரதேசத்தில் பிரித்தானியரின் அதிகாரத்தை நிலை நாட்டுதல்.<br>  • கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொள்ளுதல். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 12.0 ஆங்கிலேயர் இலங்கையில் ஏற்படுத்திய அரசியல் மாற்றங்கள் சுதேசவாசிகள் மீது தாக்கம் ஏற்படுத்திய முறையை விபரிப்பார். | 12.1 இறைமையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக சுதேசிகள் எழுச்சியடைந்த விதத்தை விளக்குவார்.<br><br>12.2 இலங்கையில் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை உருவாக்குவதற்காக பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புக்களைப் பகுத்தாய்வார். | • பிரித்தானியரின் கீழ் இலங்கை<br>  • பிரித்தானியருக்கு எதிரான இயக்கம்<br>    • 1818 இலும் 1848 இலும் பிரித்தானியருக்கு எதிரான கிளர்ச்சிகள்.<br>    • 1848 இன் பின்னரான அரச கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்.<br>• அரசியல் யாப்பு வளர்ச்சி: கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தமும் நிர்வாக சீர்திருத்தமும் | 20 |
| 13.0 பிரித்தானியரால் ஏற்படுத்தப்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள் இலங்கை சமூகத்தில் செல்வாக்குச் செலுத்திய முறையினை ஒப்பீட்டு ரீதியாக பகுத்தாய்வார். | 13.1 இலங்கையின் பெருந்தோட்டப் பொருளாதார வளர்ச்சி பற்றிய தகவல்களை விளக்குவார்.<br><br>13.2 பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக, பொருளாதார மாற்றங்களை ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாய்வார். | • பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் வளர்ச்சி<br>  • பெருந்தோட்டத்துறையின் ஆரம்பமும் பெருந்தோட்டப் பயிர்களும்<br><br>• பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள்<br>  • நிதித்தாபனங்கள், போக்குவரத்து வளர்ச்சியும் மற்றும் தொலைத் தொடர்பு முறைகளின் விருத்தி<br>  • தேசிய விவசாயப் பொருளாதாரம்<br>  • சமூக மாற்றங்கள் | 22 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 14.0 பிரித்தானியரது சமய பரப்பல் இயக்கம் மற்றும் அதற்கெதிரான தேசிய சமய எழுச்சி பற்றி கற்று தமது தனித்துவத்தை பாதுகாப்பதன் தேவைக்கேற்ப செயற்படுவார். | 14.1 இலங்கையில் மறை பரப்பு இயக்கம் செயற்பட்ட விதத்தை தெரிந்து கொள்வார்.<br>14.2 மறை பரப்பு இயக்கத்தால் பௌத்த, இந்து, இஸ்லாமிய சமயங்களில் எழுச்சி ஏற்பட்ட விதத்தை விளங்கிக் கொள்வார். | • பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமய, கலாசார மறுமலர்ச்சி<br>• மறை பரப்பு இயக்கம் (மிஷனரி)<br>• பௌத்த, இந்து, இஸ்லாமிய எழுச்சி | 14 |
| 15.0 இலங்கையின் கல்வி வளர்ச்சி பற்றிய தகவல்களைப் பகுத்தாய்வார். | 15.1 இலங்கையின் நவீன கல்வியின் வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வார். | • நவீன கல்வியின் வளர்ச்சி<br>• பிரித்தானியரின் கல்விக் கொள்கை<br>• இலவசக் கல்வியின் வளர்ச்சி | 12 |
| 16.0 நாட்டின் சுதந்திரத்தைப் பெறுவதற்கான இயக்கங்கள் பற்றி கற்று அச்சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு செயற்படுவார். | 16.1 மத்தியதர வர்க்கத்தினரின் எழுச்சி தேசிய இயக்கத்தைக் கட்டியெழுப்புதல் என்பன தொடர்பான தகவல்களைப் பகுத்தாய்வார்.<br>16.2 அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் தேசிய சுதந்திரத்தை அடைதல் தொடர்பாக ஒப்பீட்டு ரீதியில் விடயங்களை விளக்குவார். | • தேசிய இயக்கமும் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும்<br>• மத்தியதர வர்க்கமும் தேசிய இயக்கமும்<br>• சட்டவாக்க வளர்ச்சி<br>• டொனமூர் யாப்பு<br>• சோல்பரி யாப்பும் தேசிய சுதந்திரமும் | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 17.0 தேசிய சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்களை நுணுகியாய்ந்து நல்லாட்சிக்காகப் பங்களிப்புச் செய்வார். | 17.1 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் தேசிய அபிவிருத்தி தொடர்பாகக் அனுசரிக்கப்பட்ட கொள்கைகள் தொடர்பான தகவல்களை விளக்குவார். | • சுதந்திரத்தின் பின்னர் இலங்கை<br>  • தேசிய அபிவிருத்திக்காகக் பின்பற்றப்பட்ட கொள்கைகளும் வெழிவகைகளும் | 20 |
| | 17.2 சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் அரசியல் நிலைமையைப் பரிசீலிப்பார். | • பாராளுமன்ற ஆட்சி முறையின் வளர்ச்சி - 1972 வரை<br>  • நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறை - 1978 | |

## 3.2 தரம் 13

### இந்திய வரலாறு (வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம்)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 6.0 மத்திய ஆட்சியின் பல வீனங்கள் காரணமாக பிரதேச ஆட்சியாளர் கள் வலிமை பெறும் விதத்தை இந்திய வர லாற்றினூடாகப் பகுத் தாய்வார். | 6.1 வடமேற்கிலிருந்து வந்து செல்வாக்குச் செலுத்திய வர்கள் பற்றிய தகவல் களைச் சேகரிப்பார்.<br>6.2 மத்திய ஆட்சியின் பல வீனங்கள் காரணமாக அண்மைக்கால இந்திய வரலாற்றில் செல்வாக் குச் செலுத்திய மாநில அரசுகள் பற்றிய தகவல் களை சேகரிப்பார். | • மௌரிய பேரரசின் முடிவு முதல் குப்த பேரரசின் ஆரம்பம் வரை இநதியாவின் அரசியல், பண்பாட்டு வரலாறு<br>• இந்து - கிரேக்கர் (சுருக்கமாக)<br>• சாக்கியர்<br>• குசாணர்கள்<br>• சுங்கையோர்<br>• சாதவகவாணர்கள் | 20 |
| 7.0 இந்திய நாகரிகத்தின் வளர்ச்சியும் விரிவாக்க மும் பற்றிக் கற்று அத னால் கீழைத்தேயம் பெற்ற அருஞ்செல்வங் களை குப்த பேரரசின் ஊடாகப் பகுத்தாய் வார். | 7.1 இந்திய வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் குப்தப் பேரரசின் பங்க ளிப்பு தொடர்பாக தகவல்களை விளக்கு வார்.<br>2A.7.2 குப்தப் பேரரசு வீழ்ச்சி யுற்ற விதம் பற்றிய விடயங்களைத் திரட்டு வார். | • குப்த பேரரசு<br>• குப்த பேரரசின் அதிகார விரிவாக்கம்<br>• குப்தப் பேரரசின் நிருவாகம்<br>• பொருளாதார நிலைமை<br>  • விவசாயம், கைத்தொழில்<br>  • உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம்<br>• பண்பாடு<br>  • சமயம், தத்துவம், மொழியும் இலக்கியமும், கட்டிடக்கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை<br>• குப்தப் பேரரசின் வீழ்ச்சி | 24 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 8.0 தென்னாசிய பிராந்தியத்தில் பல்லவர்களின் அரசியல் மற்றும் பண்பாட்டு செயற்பாடுகள் செல்வாக்குச் செலுத்திய விதத்தைப் பகுத்தாய்வார். | 8.1 பல்லவர்களின் ஆட்சியதிகாரம் விரிவடைந்த விதத்தை விளக்குவார்.<br>8.2 பல்லவர்களின் கலாசாரம் பற்றிய தகவல்களை விளக்குவார்.<br>8.3 பல்லவர்களின் வெளிநாட்டுத் தொடர்புகளையும் அந்நாடுகள் மீது பல்லவரின் செல்வாக்குகளையும் விளக்குவார். | • பல்லவர்களின் அரசியல் மற்றும் கலாசார செயற்பாடுகள்<br>  • பல்லவரின் அதிகார விரிவாக்கம்<br>  • பல்லவர் பண்பாடு<br>  • பல்லவரின் வெளிநாட்டுத்தொடர்புகள்<br>  • வெளிநாடுகள் மீதான பல்லவரின் செல்வாக்கு | 12 |
| 9.0 இந்திய நாகரிகத்தின் வளர்ச்சியையும் விரிவாக்கத்தையும் பற்றி அறிந்து அதன் மூலம் கீழைத்தேயம் பெற்ற அருஞ்செல்வங்களைப் பகுத்தாய்வார். | 9.1 குப்த யுகத்தின் இறுதியிலிருந்து முஸ்லிம் ஆக்கிரமிப்பு வரையான காலத்துக்குள் வட இந்தியாவின் வரலாற்றுத் திருப்பு முனைகளை விளக்குவார்.<br>9.2 இந்தியாவின் உன்னத நிலைமையில் பரவலான மாற்றமொன்றைத் தோற்றுவிப்பதற்கு முஸ்லிம்களின் ஆக்கிரமிப்பு வழிகோலிய விதத்தை விளங்கிக் கொள்வார். | • குப்த யுகத்தின் இறுதி தொடக்கம் முஸ்லிம் ஆக்கிரமிப்பு வரையான காலத்துக்குள் வட இந்தியாவின் வரலாற்றுத் திருப்பு முனைகள்<br>• குப்த யுகத்தின் இறுதி தொடக்கம் முஸ்லிம் ஆக்கிரமிப்பு வரை<br>  • ஹர்ஷவர்தன மன்னனின் கீழ் கனவ்ஜவின் எழுச்சி<br>  • கனவ்ஜவின் அதிகாரத்துக்காக இடம்பெற்ற போராட்டங்கள்<br>  • பால அரசர்களின் அரசியல், பண்பாட்டுச் செயற்பாடுகள்<br>• முஸ்லிம் ஆக்கிரமிப்பும் இந்தியாவும்<br>  • அராபியரதும் துருக்கியரதும் ஆக்கிரமிப்புகள்<br>  • இந்தியாவில் முஸ்லிம்களின் அதிகாரம் நிலைநாட்டப்படல் | 22 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 10.0 தென்பிராந்தியத்தின் முக்கியமான பிரதேச அரசுகளின் வரலாற்றைப் பகுத்தாய்வார். | 10.1 இந்தியாவின் தென் பிராந்தியத்தில் சாளுக்கியர்களின் செயற்பாடுகளைப் பரிசீலிப்பார்.<br>10.2 ராஷ்டிரகூடர்களினதும் பாண்டியர்களினதும் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக தேடியறிவார். | • சாளுக்கியர்கள், ராஷ்டிரகூடர், பாண்டியர்களின் சுருக்கமான அரசியல் வரலாறு | 20 |
| 11.0 இந்திய வரலாற்றின் உருவாக்கத்தில் தென்னிந்தியப் பண்பாட்டின் செல்வாக்கை விளக்குவார். | 11.1 சோழப் பேரரசின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய தகல்வளை விளக்குவார்.<br>11.2 சோழப் பேரரசு இந்தியாவுக்கு அப்பால் விரிவடைந்த விதத்தை விவரிப்பார்.<br>11.3 சோழரின் ஆட்சி முறை உருவாக்கப்பட்டிருந்த விதத்தைப் பரிசீலிப்பார்.<br>11.4 சோழர்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தகவல்களைத் திரட்டுவார். | • சோழப் பேரரசு<br>• சோழப் பேரரசின் தோற்றமும் விருத்தியும்<br>• முதலாம் பராந்தகன், முதலாம் இராஜேந்திர சோழன், முதலாம் குலோத்துங்கன்<br>• சோழப் பேரரசு இந்தியாவுக்கு அப்பால் விரிவடைந்த பரம்பல்<br>• சோழ அதிகார அமைப்பு<br>• சோழரின் சமூக, பொருளாதார நிலை<br>• பண்பாடு<br>சமயம், மொழியும், இலக்கியமும், கட்டிடக்கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை | 20 |

## 3.3 தரம் 13

### ஐரோப்பிய வரலாறு (கி.பி. 1500 தொடக்கம் 1989 வரை)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.0 மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் உலக சமாதானத்தைப் பாது காக்கும் பொருட்டுக் கட்டியெழுப்பப்பட்ட அமைப்புக்கள் தொடர் பாகப் பரீட்சிப்பார். | 9.1 வியன்னா மகாநாட்டின் செயற்பாடு பற்றிப் பகுத் தாய்வார்.<br>9.2 பிற்காலத்தில் உலக சமா தானத்தை ஏற்படுத்துவ தில் வியன்னா மகாநாடு வழங்கிய பங்களிப்பைப் பரிசீலிப்பார். | • வியன்னா மகாநாடு<br>• வியன்னா மாநாடு அறிமுகம்<br>• வியன்னா மாநாடு கூட்டப்பட்டமைக்கான காரணங்கள்<br>• வியன்னா மாநாடு எதிர்கொண்ட பிரச்சினைகள்<br>• வியன்னா மாநாடு பின்பற்றிய வழிமுறைகள்<br>• வியன்னா மாநாட்டின் விளைவுகள் | 15 |
| 10.0 உலக வரலாற்றி னைக் கட்டியெழுப்பு வதற்கு உதவிய அரசியல் சக்திகளை இத்தாலி, ஜேர்மனி ஊடாக ஒப்பீட்டு ரீதி யில் பகுத்தாய்வார். | 10.1 உலக வரலாற்றைக் கட்டுவதற்கு அடிப்படை யாக அமைந்த அரசியல் சக்திகள் தொடர்பான தகவல்களை, தாரா ண்மை (லிபரல்வாதம்), தேசிய வாதம் ஆகிய சிந்தனைகளின் விருத்தி ஊடாக விளக்குவார்.<br>10.2 இத்தாலியை ஐக்கியப் படுத்தல், ஜேர்மனியை ஐக்கியப்படுத்தல் இயக் கத்தின் ஊடாக தாராண் மையும் (லிபரல்வாதம்) தேசிய வாதமும் நடை முறையில் செயற்பட்ட விதத்தை பரிசீலிப்பார். | • கி.பி. 1815 இன் பின்னர் தாராண்மையும் (லிபரல் வாதமும்) தேசிய வாதமும் எழுச்சி பெறல்.<br>• அரசியல் சிந்தனை<br>• தாராண்மை (லிபரல் வாதம்) தேசிய வாதம் - அறிமுகம்<br>• தாராண்மை (லிபரல் வாதம்) தேசிய வாதம் ஆகியவற்றின் வளர்ச்சி<br><br>• அரசியல் சிந்தனைகளை நடைமுறையில் பிரயோகித்தல்<br>• இத்தாலியை ஐக்கியப்படுத்தல்<br>• ஜேர்மனியை ஐக்கியப்படுத்தல் | 27 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 11.0 முதலாவது உலக மகா யுத்தத்தின் கொடூரத்தையும் சமாதானத்தின் பொருண்மையையும் ஒப்பீட்டு ரீதியில் விமர்சிப்பார். | 11.1 முதலாம் உலக யுத்தம் மனித வர்க்கத்தின் முன்னோக்கிய பயணத்திற்குத் தடையாக அமைந்த விதம் பற்றி நுணுகியாய்ந்து யுத்த நிலைமை களிலிருந்து விலகி இருப்பதற்கான நடவடிக் கைகளை மேற்கொள் வார். | • முதலாம் உலக மகா யுத்தம்<br>• யுத்தம்<br>• காரணங்கள்<br>• நீண்ட காலக்காரணிகள்<br>• குறுங்காலக் காரணிகள்<br>• யுத்தம் விரிவடைதல்<br>• விளைவுகள் | 15 |
| | 11.2 உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் முயற்சி களில் ஒன்றான சர்வ தேச சங்கத்தின் செயற் பாடுகளை ஒப்பீட்டு ரீதியாகப் பரிசீலிப்பார். | • சர்வதேச சங்கம்<br>• நோக்கங்களும் ஆரம்பமும்<br>• சர்வதேச சங்கத்தின் பண்புகள் (சாதகமானவை/ பாதகமானவை) | |
| 12.0 மானிட வர்க்கத்தின் முன்னேற்றத்துடன் தொடர்புடைய முக்கியமான புரட்சிகர சக்திகளைப் பகுத்தாய் வார். | 12.1 ரஷ்யப் புரட்சிக்கான காரணங்களையும் அது ஏற்பட்ட விதத்தையும் விளக்குவார். | • ரஷ்யப் புரட்சி<br>• ரஷ்யப் புரட்சிக்கான காரணங்கள்<br>• புரட்சி ஏற்பட்ட விதம் | 15 |
| | 12.2 உலக நாகரிகத்தின் ஊட்டத்திற்கு ரஷ்யப் புரட்சியினால் ஏற்பட்ட தாக்கத்தை விளக்குவார். | • ரஷ்யப் புரட்சியின் முக்கியத்துவம் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 13.0 உலக வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கு வழிவகுத்த அரசியல் சக்திகள் பற்றி பாசிச, நாசிச வாதங்களினூடாக ஒப்பீட்டு ரீதியாக பகுத்தாய்வார். | 2B.13.1 பாசிச, நாசிச வாதங்கள் செயற்பட்ட விதத்தைப் பரிசீலிப்பார்.<br><br>13.2 பாசிச, நாசிச வாதங்களுக்கிடையேயான தொடர்புகளைப் பரிசீலிப்பார். | • பாசிசமும், நாசிசமும்<br>• இத்தாலியில் பாசிசம்<br>• பாசிசம் வளர்ச்சியடைந்தமைக்கான காரணிகள்<br>• பாசிசத்தின் விளைவுகள்<br>• ஜேர்மனியில் நாசிசம்<br>• நாசிசம் வளர்ச்சியடைந்தமைக்கான காரணிகள்<br>• நாசிசத்தின் விளைவுகள்<br>• பாசிசத்திற்கும் நாசிசத்திற்குமிடையிலான தொடர்புகள் | 15 |
| 14.0 இரண்டாம் உலக மகா யுத்தத்தின் கொடூரத்தையும் சமாதானத்தின் பொருண்மையையும் விளங்கிக் செயற்படுவார். | 14.1 இரண்டாம் உலக யுத்தம் மனித இனத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த விதத்தை நுணுகியாய்ந்து யுத்த நிலைமைகளிலிருந்து தவிர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்.<br><br>14.2 உலக சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு வழிமுறையாக தாபித்துக் கொள்ளப்பட்ட ஐக்கிய நாடுகள் அமையம் பற்றி விளக்குவார். | • இரண்டாம் உலக மகா யுத்தம்<br>• யுத்தம்<br>• காரணங்கள்<br>• யுத்தம்<br>• விளைவுகள்<br><br>• ஐக்கிய நாடுகள் அமையம்:<br>• நோக்கங்களும் ஆரம்பமும்<br>• ஐக்கிய நாடுகள் அமையத்தின் கட்டமைப்பு<br>• இணை நிறுவனங்கள்<br>• முக்கியத்துவம்<br>• எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 15.0 உலகின் தற்கால அரசியல் அடிப்படைகளைக் கட்டியெழுப்புவதற்கு வழிவகுத்த பிரதான சக்திகள் தொடர்பாக ஒப்பீட்டு ரீதியாக பகுத்தாய்வார். | 15.1 சோவியத் ரஷ்யாவும் ஐக்கிய அமெரிக்காவும் சமவுடமை, முதலாளித்துவ அணிகளாக எழுச்சி பெற்று, உலக அரசியலில் ஏற்படுத்திய தாக்கத்தை விவரிப்பார்.<br><br>15.2 பனிப்போர் காலத்தில் பலம் வாய்ந்த அணிகளிடையே அமைதியை ஏற்படுத்தும் பொருட்டு ஐக்கிய நாடுகள் அமையத்தின் பங்களிப்பினை மதித்துப் பிரஸ்தாபிப்பார். | • இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உலகம்<br>  • பலம் வாய்ந்த அணிகள்:<br>    • சமவுடமை<br>    • முதலாளித்துவம்<br>    • அணிசேரா நாடுகள்<br><br>• பனிப்போர் (கெடுபிடிப்போர்)<br>  • கருத்து முரண்பாடு<br>  • கருத்துக்களைப் பரப்புவதற்கான பொது அமைப்புகள்<br>  • பனிப்போர் பலவீனமாதல்<br>  • ஐக்கிய நாடுகள் அமையத்தின் செயற்பாடுகள் | 25 |

## 3.4 தரம் 13

### நவீன உலக வரலாறு (கி.பி. 1500 தொடக்கம் 1989 வரை)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 7.0 உலகின் அரசியல், பொருளாதார கோலங்களை பரந்த மாற்றங்களுக்கு உட்படுத்திய புதிய பேரரசுவாதம் பற்றி பகுத்தாய்வார். | 7.1 புதிய பேரரசுவாதம் என்றால் என்ன என்பதை விளக்கி, அவ்வாறான நிலைமை ஏற்பட்டமைக்கான காரணங்களைப் பரிசீலிப்பார். | • புதிய பேரரசுவாதம்<br>• புதிய பேரரசுவாதம் - அறிமுகம்<br>• புதிய பேரரசுவாதம் எழுச்சியுறுவதற்கு அடிப்படையாக அமைந்த வரலாற்றுப் பின்னணி | 15 |
| | 7.2 ஆபிரிக்காவுக்கான போட்டியைப்பற்றி விளக்குவார். | • ஆபிரிக்கா தொடர்பான போட்டி | |
| 8.0 முதலாம் உலக மகா யுத்தத்தின் கொடுரம் பற்றி ஆராய்ந்து சமாதானத்தைப் பாது காக்க முன்வருவார். | 8.1 முதலாம் உலக மகா யுத்தம் மனித இனத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்த விதத்தை விளக்குவார். | • முதலாம் உலக யுத்தம்<br>• யுத்தத்திற்கான பின்னணி<br>• யுத்தத்தில் ஈடுபட்ட அணிகளும் ஏனைய பங்காளிகளும் | 14 |
| | 8.2 யுத்த நடவடிக்கைகளிலிருந்து விலகி இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள் வார். | • யுத்ததத்தின் விளைவுகள்<br>• சர்வதேச சங்கம்<br>• புதிய அரசுகளின் எழுச்சி | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.0 தற்கால உலகில் அரசியல் அடிப்படைக் கட்டியெழுப்ப முக்கிய வழிகளாய் அமைந்த பிரதான சக்திகள் பற்றி ஒப்பீட்டு ரீதியாகப் பகுத்தாய்வார். | 9.1 ஐக்கிய அமெரிக்கா முதலாளித்துவ நாடாக எழுச்சி பெற்றுமை உலக அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்திய விதத்தை விவரிப்பார். | • ஐக்கிய அமெரிக்கக் குடியரசும், சோவியத் ஒன்றியமும் எழுச்சி பெற்றமை.<br>• ஐக்கிய அமெரிக்க குடியரசு<br>• சிவில் யுத்தத்தால் ஐக்கிய அமெரிக்க குடியரசு பலமடைதல்<br>• பொருளாதாரம்<br>• யுத்தவலிமை<br>• வெளிநாடுகளுக்கு ஆதிக்கம் விரிவடைதல் | 20 |
| | 9.2 சோவியத் ரஷ்யா சோசலிச நாடாக எழுச்சி பெற்றுமை உலக அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்திய விதம் பற்றிய தகவல்களை வெளியிடுவார். | • சோவியத் ஒன்றியம்<br>• புரட்சியின் பின்னர் சமவுடமைக் கொள்கை கட்டியெழுப்பப்படல்.<br>• சோவியத் ஒன்றியம் ஐரோப்பாவில் வல்லரசு நாடாக எழுச்சி பெற்றமை | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 10.0 தற்கால உலகின் பேரரசு வாதத்தைத் தளர்வுறச் செய்யும் பல்வேறு இயக்கங் களை நுணுகியாய்ந்து சுதந்திரத்தின் பெறுமா னத்தை விளங்கிச் செயற்படுவார். | 10.1 உலகம் முழுவதிலும் காணப்பட்ட பேரரசுக ளுக்கு எதிரான போராட்ட இயக்கங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.<br>10.2 ஆசியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய போராட்ட இயக்கங்கள் பற்றிய தகவல்களை விளக்குவார்.<br>10.3 ஆபிரிக்காவில் ஏகாதிபத் திய விரோதமான தேசிய போராட்ட இயக்கங்களின் தோற்றம் பற்றிய தகவல் களை விளக்குவார். | • பேரரசுவாதத்திற்கு எதிரான தேசிய போராட்ட இயக்கங்கள்<br>• லத்தீன் அமெரிக்கா<br>• ஆசியா<br>• தென்னாசியா<br>• தென்கிழக்காசியா<br>• மேற்காசியா<br>• ஆபிரிக்கா | 20 |
| 11.0 இரண்டாம் உலக மகா யுத்தத்தின் கொடுரம் பற்றி ஆராய்ந்து சமாதானத் தின் பொருண்மையை விளங்கிச் செயற்படு வார். | 11.1 இரண்டாம் உலக மகா யுத்தம் தொடர்பான தக வல்களை விளக்குவார்.<br>11.2 இரண்டாம் உலக மகா யுத்தம் மனித இனத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்த விதத்தை அப்போரின் விளைவுகளினூடாகப் பகுத்தாய்வார். | • இரண்டாம் உலக மகா யுத்தம்<br>• போருக்கான காரணிகள்<br>• போரில் ஈடுபட்ட அணிகளும் தரப்பினரும்<br>• போர்த்தந்திரங்களும் போர்த்தொழினுட்பமும்<br>• விளைவுகள் | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 12.0 தற்கால உலகின் அரசியல் அடிப்படையைக் கட்டியெழுப்ப உதவிய பிரதான சக்திகள் பற்றி நுணுகியாய்ந்து தற்கால உலகின் நிலைமை பற்றிய தெளிவுடன் செயற்படுவார். | 12.1 ஆயுத மோதல்களற்ற பனிப்போரை நோக்கி உலகம் சென்றமையை உலக நாடுகள் சக்தி வாய்ந்த அணிகளாகப் பிரிந்து சென்றமை ஊடாகப் பகுத்தாய்வார். | • இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர்<br>• உலகம் பலம் வாய்ந்த அணிகளாகப் பிரிதலும் அவைகளிடையே காணப்பட்ட போட்டியும்<br>• அரசியல் கருத்துக்கள்<br>• பொருளாதாரம்<br>• தொழில் நுட்பம் | 17 |
| | 12.2 மத்திய கிழக்கு அரசியல் போக்குகள் பற்றிய தகவல்களை விளக்குவார். | • மத்திய கிழக்கு நாடுகளில் அரசியல் போக்குகள் பலஸ்தீனம், இஸ்ரவேல் | |
| | 12.3 பலம் வாய்ந்த அணி ஒன்று வீழ்ச்சியுறலை சோவியத் ரஷ்யாவை அடிப்படையாகக் கொண்டு பகுத்தாய்வார். | • சோவியத் அரசின் வீழ்ச்சியும் அதன் விளைவுகளும் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 13.0 உலகின் சிக்கார்ந்த தன்மையை எதிர் கொள்ளுவதற்காக, சர்வதேச மற்றும் பிரதேச ரீதியில் அமைப்புகள் தோன்றிய விதத்தைப் பகுத்தாய்வார். | 13.1 ஆயுத போராட்டமற்ற உலகொன்றை உருவாக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அமையம் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவார். | • சர்வதேச, அமைப்புகளும் பிராந்திய அமைப்புக்களும்<br>• ஐக்கிய நாடுகள் அமையம் | 25 |
| | 13.2 பிரித்தானியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர் அப் பேரரசிற்குக் கீழிருந்த நாடுகள் இங்கிலாந்துடன் உறவுகளை ஏற்படுத்தும் பொருட்டு உருவாக்கிக் கொள்ளப்பட்ட பொது நலவாய அமைப்புப் பற்றிய தகவல்களை விளக்குவார். | • பொது நலவாய அமைப்பு | |
| | 13.3 முக்கிய பலம்வாய்ந்த இரு அணிகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறும் பொருட்டு அமைக்கப்பட்ட அணிசேரா நாடுகளின் அமைப்புப் பற்றிய தகவல்களைப் பரிசீலிப்பார். | • அணிசேரா நாடுகளின் அமைப்பு | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 13.4 பனிப்போர் காலத்தில் பலம் வாய்ந்த இரு அணிகளும் தமது அதிகாரங்களை விரிவுபடுத்தும் பொருட்டு நிறுவிய அமைப்புக்களின் செயற்பாடு பற்றிய தகவல் களை விளக்குவார்.<br><br>13.5 பிராந்திய ரீதியாகத் தமது தேவைகளைப் பூர்த்தி செய் யும் பொருட்டு அமைப்புக் கள் உருவாக்கப்பட்டமை யைப் பகுத்தாய்வார். | • பிரதான முகாம்களுக்குரிய அமைப்புகள்:<br>• வட அத்திலாந்திக் பாதுகாப்பு உடன்படிக்கை அமைப்பு (NATO)<br>• வார்சோ உடன்படிக்கை (WARSO)<br><br>• பிராந்திய அமைப்புகள்:<br>• தென்கிழக்காசிய நாடுகளின் பாதுகாப்பு உடன்படிக்கை அமைப்பு (SEATO)<br>• தென்கிழக்காசிய அமைப்பு (ASEAN)<br>• ஆபிரிக்க ஐக்கிய அமைப்பு (OAU)<br>• ஐரோப்பிய ஒன்றியம் (EU)<br>• தென்னாசிய அமைப்பு (SAARC)<br>• அரபு லீக் (ARAB LEAGUE) | |

## 4.0 கற்றல் - கற்பித்தல் முறைகள்

வரலாற்றைக் கற்பிக்கும் ஆசிரியர் தகவல்களை வழங்குபவராக இருப்பதை விட தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் மாணவர்களுக்கு வழிகாட்டுபவராக இருப்பாரானால் கற்பித்தல் பணி மிகவும் பயனுள்ளதாயிருக்கும். எனவே இயலுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் கலந்துரையாடுதல், மூலாதாரங்களைப் பயன்படுத்துதல், அவதானித்தல் போன்ற செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்துதல் விரும்பத்தக்கதாகும். வரலாற்றைக் கருத்துள்ள வகையில் கற்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்தக்கூடிய சில வழிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன:

- தேசிய அருங்காட்சியகம், பிரதேச அருங்காட்சியகம் போன்றவற்றின் மூலம் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களின் கீழ் அரும்பொருள்களைப் பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- பிரதேச வரலாற்றை அறிந்து கொள்ள மாணவர்க்கு ஆர்வமூட்டுவதனூடாகத் தேசிய வரலாற்றை அறிய வழிப்படுத்துதல்.
- ஊடகங்கள் மூலம் தகவல்களைப் பெறச் சந்தர்ப்பம் வழங்குதல். (வானொலி, தொலைக்காட்சி, சர்வதேச இணைய வலைப்பின்னலின் கல்விச்சேவைகள்.)
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிட ஆர்வமூட்டுதல்.
- ஆதார மூலங்களைப் பயன்படுத்துவதற்கு ஆர்வமூட்டுதல்.
- மாணவர் தமது ஆற்றலை வெளிப்படுத்தச் சந்தர்ப்பங்களை வழங்கும் விதத்தில் சுவர்ப்பத்திரிகைகள். சஞ்சிகைகள் வெளியிடுதல், கண்காட்சிகள் நடத்துதல், பாடசாலை அருங்காட்சியகத்தை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட ஊக்கம் அளித்தல்.
- வரலாற்று ஆசிரியராகிய நீங்கள், தற்காலப் பிரச்சினைகளை நடுநிலையாகவும் யதார்த்தமாகவும் நோக்குகின்ற விளைதிறனுள்ள குடிமக்களை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்ய முடியும். இது தொடர்பாக உங்களது பொறுப்பு அளப்பரியதாகும்.

## 5.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

வரலாற்றுப் பாடத்திட்டத்தில் அடங்கியுள்ள பாடவிடயங்களை வெற்றிகரமாகவும், வினைத்திறன் வாய்ந்த வகையிலும் கற்பதற்கும் அதனூடாக கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏற்புடைய வகையில் மாணவர்களின் பங்குபற்றலை விருத்திசெய்யும் விதமாகப் பாடசாலைக் கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் திட்டமிட்டுக் கொள்வது பயனுடையதாகும்.

அவ்வாறான சில பாடசாலை வேலைத்திட்டங்களே இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப வேறு ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களையும் கொள்கைகளையும் தயாரிப்பதற்கான சுதந்திரம் வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உண்டு என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

- வரலாற்று மன்றத்தை நிறுவி மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கான கலந்துரையாடல்கள், மாநாடுகள், விவாதங்கள், கண்காட்சிகளை நடாத்துவதற்கும், சஞ்சிகைகள், சுவர்ப் பத்திரிகைகள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கும் வழிப்படுத்தலாம்.
- குறைந்தபட்சம் வருடத்துக்கு ஒரு தடவையேனும், வரலாற்று முக்கியத்துவமுடைய ஓர் இடத்துக்கு அல்லது பிரதேசத்துக்கு செல்வதற்காக கல்விச் சுற்றுலாவொன்றினை ஒழுங்கு செய்யலாம். வகுப்பறையில் பெற்ற அறிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் விருத்தி செய்து கொள்வதற்கும் ஏற்றவாறு போதிய முன்னேற்பாட்டுடன் கல்விச் சுற்றுலாவை ஒழுங்கு செய்வது முக்கியமானது.
- இலங்கையின் புகழ் பெற்ற வரலாற்று ஆய்வாளர்களைப் பாடசாலைக்கு அழைத்து அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் பயனுள்ளதாகும்.
- தொல்பொருள்கள் அழிவுக்குள்ளாகி வரும் இன்றைய காலகட்டத்தில் பிரதேசத்திலுள்ள தொல்பொருள் முக்கியத்துவமுள்ள இடங்கள் தொடர்பாகத் தேடியாராயவும் அவற்றைப் பாதுகாக்கவும் பாடசாலையுடன் தொடர்புடைய வகையில் சமுதாய வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல்.
- வரலாற்றுப் பாடத்திற்குரிய ஓவியங்கள், சிலைகள், செதுக்கு வேலைப்பாடுகள், ஏனைய அரும்பொருட்கள் போன்றவற்றை அவதானித்து அறிக்கை தயாரிக்கக் கூடியவாறு அருங்காட்சியக வேலைத்திட்டமொன்றினை ஏற்பாடு செய்தல் உகந்தது.

## 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பாடசாலை மட்ட கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தவணைக்கும் உரிய தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் உள்ளடங்கும் வகையில் கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு உபகரணங்கள் ஆக்கப்பூர்வமாகத் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் எதிர்பார்க்கப்படுகிறது.

தரம் 13 இன் இறுதியில் தேசிய மட்ட மதிப்பீடாகிய க.பொ.த (உ/த) பரீட்சைக்காக இப்பாடத்திட்டம் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்திற்கமைவாக இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தினால் நடத்தப்படும் தேசிய மட்டப் பரீட்சை முதல் தடவையாக 2011 இல் நடாத்தப்படும்.

இப்பரீட்சையின் - வினாத்தாள்களின் மாதிரி மற்றும் தன்மை தொடர்பான விவரங்கள் பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்படும்.